

மலர்:01
மார்ச்~2013
இதழ்:02
கழுகு
Eagle
என் மீட்பர்
உயிரோடிருக்கிறார்
யோபு 19:25
Happy Easter
தனிப்பிரதி ரூ.30/=

# கல்வாரி கழுகுகளின் நிவாரணப்பணி - 2013








கடந்த 03-01-2013 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தை சேர்ந்த 80 குடும்பங்களுக்கு கல்வாரி கழுகுகளினால் "கல்வாரி அன்பினால்" எனும் நிவாரணப்பொதிகள் வழங்கப்பட்டன.

"மிகவும் சிறியவராகிய என் சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்." மத்தேயு 26:40



## உள்ளே...


- உங்கள் சகோதரனிடமிருந்து...
- சிறப்பு செய்தி
- பாடுகள் எமது வாக்குத்தத்தம்
- வா! வாலிபனே வா!
- மிரியாம்களே எழுந்திருங்கள்
- அறிந்து கொள்ளுங்கள்...
- அமைதி, ஆற்றல், அபரிமிதம்
- சாவலோக நியாயாதிபதி
- நீ ஏன்?
- விண்பனி இறுவட்டு வெளியானது.
- வாழ்த்துகிறோம்
- வாலிபர் பாசறை


## உங்கள் சகோதரனிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

மறுபடியும் கழுகு சஞ்சிகையில் உங்களை சந்திக்க கிடைத்த தேவ கிருபைக்காக ஸ்தோத்திரம். எமது முதற்பிரதியை வாங்கி வாசித்து நீங்களும் பயனடைந்து எம்மையும் உற்சாகப்படுத்திய ஒவ்வொரு வாசகர்களுக்கும் எமது நன்றிகள்.

தொடர்ந்தும் இந்த ஊழியத்தை ஜெபத்திலும் உங்கள் உதவிகளினாலும், ஆக்கங்களினாலும் தாங்குங்கள். தொடர்ந்தும் எம்மோடு இந்த சஞ்சிகைமூலம் இணைந்திருங்கள். உங்கள் நண்பர்களுக்கும், சபை மக்களுக்கும் கழுகு சஞ்சிகையை அறிமுகம் செய்யுங்கள்.

தேவசமாதானம் உங்களனைவரோடுமிருப்பதாக. ஆமேன்.

*உங்கள் சகோதரன்,*
*சகோ.ச.கஜேந்திரன் (விக்ரம்)*

# சிறப்பு செய்தி




*கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.*

கிறிஸ்தவத்தின் ஸ்தாபகர் கிறிஸ்து இயேசுவே. அவர் கிறிஸ்தவத்தை ஒரு மதமாக ஆரம்பித்து வைக்கவில்லை. கிறிஸ்து ஒரு மதத்தலைவரும் அல்ல. ஆனால், அவரைப்போல் வாழ்ந்தவர்களைக் கவனித்தவர்கள் அவர்களை கிறிஸ்தவர்கள் என அழைத்தனர். கிறிஸ்தவர்களின் ஆரம்பம் கிறிஸ்துவே. (அப்போஸ்தலர் 11:26)

1) கல்லறைக்கு அப்பால்

கிறிஸ்துவானவர் கல்லறைக்கு அப்பால், சீடர்களை சந்திக்க போவதை மரணத்திற்கு முன்பு பலமுறை கூறி இருக்கிறார். மத்தேயு 26:32, மாற்கு 16:7

இயேசு உயிரோடு இருக்கும்போதே உயிர்த்தெழுதலைப்பற்றி அறிவித்தார். அதைப்பற்றி உறுதிப்பாட்டோடு வாழ்ந்தார்.

இயேசுக்கிறிஸ்து மனித குலத்தின் பாவத்திற்காக மரித்தது உண்மை. ஏனெனில் அவர் மூலமாகவே பாவமன்னிப்பு உண்டாயிற்று. பாவமன்னிப்புக்காக கிறிஸ்து சிலுவையில் மரிக்கவேண்டுமென்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ரோமர் 5:8, யோவான் 3:16, அப்போஸ்தலர் 4:10

மரித்தார், கல்லறையில் வைக்கப்பட்டார். ஆனால் அவரை கல்லறைக்குள் வைத்திருக்க கல்லறைக்கோ, மரணத்திற்கோ அதிகாரம் இல்லை. கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

உயிர்த்தெழுதலின் முதற்பலனானார். 1கொரிந்தியர் 15:20

உயிரோடிருக்கும் நாம் பாவமன்னிப்பு பெற்று, மரணத்திற்கு அப்பால் எனக்கு வாழ்வு உண்டு என்ற நிச்சயத்தையும் பெற்று, அந்த உறுதிப்பாட்டோடு வாழவேண்டும்.

## 2) உலகத் தலைவர்களின் கல்லறைகள்

இன்று உலகப் புகழ்பெற்ற மதத்தலைவர்கள், மதங்களை ஸ்தாபித்தவர்களின் கல்லறைகளுக்கு விஜயம் செய்தால், அவை பாதுகாக்கப்பட்டு பத்திரமாக இருக்கிறது. ஆனால் இயேசுக்கிறிஸ்துவின் கல்லறைக்கு போனால், "அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்." என்ற தேவதூதர்களின் செய்தி தொனித்துக்கொண்டிருப்பதை 2011 ஜீன் மாதம் நாம் சென்று பார்த்தபோது உண்மை என்பதை அனுபவித்தோம். அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிறிஸ்தவனின் அடக்க ஆராதனைகளையும் கொண்டாட்டமாய் மாற்றுகிறது. ஆடிப்பாடி அடக்கம்பண்ணப்படவேண்டியவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்கள் மட்டுமே. அப்படிப்பட்ட அடக்கத்திற்கு நீங்கள் ஆயத்தமா?

## 3) எப்படி ஆயத்தமாகலாம்?

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுங்கள் - உயிரோடிருக்கும்போது மட்டுமே நீங்கள் ஆயத்தமாகலாம். நீங்கள் இப்பூமியில் வாழும் வாழ்க்கையே மரணத்தின் பின் உங்களுக்கு நரகமா? பரலோகமா? என்பதை தீர்மானிப்பது.

*"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" ரோமர் 10:9*

இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். பாவத்தை அறிக்கைசெய்து விட்டுவிடுங்கள். அப்பொழுது மரணத்தை ஜெயிப்பீர்கள்.

## 4) வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுங்கள்

மரணத்தின் பின்பு நாங்கள் ஒவ்வொருவரும் நமது வாழ்வை குறித்து கணக்கொப்புவிக்கவேண்டும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட வரங்கள், திறமை-களை என்ன செய்தீர்கள்?

தாமதம் செய்யாதீர்கள். திறமைகள், வரங்களை கர்த்தருக்காய் பயன்படுத்துங்கள். அவரை மகிமைப்படுத்துவதே எமது வாழ்வின் நோக்கம் - யோவான் 17:4.

உயிர்த்தெழுந்து சீடர்களை சந்திக்க சென்ற இயேசு, உங்களை சந்திக்க பரலோகத்தில் காத்துக்கொண்டிருக்கிறார். உயிர்த்தெழுந்த அருள்நாதர் இயேசுவை உணர்வுபூர்வமாய் கொண்டாடுவோம்.

"இயேசு உயிர்த்தெழுந்தார்"

உயிர்த்தெழுந்த இயேசு உங்கள் உள்ளத்தில் இருந்தால், உங்களுக்கும் உயிர்த்தெழுதல் நிச்சயமே!

*போதகர்.L.J.மத்தியுஸ்,*
*தலைமைப்போதகர்*




*"ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்."* *மத்தேயு 10:16*

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! பாடுகள் உபத்திரவங்கள் எமக்கு வாக்குத்தத்தங்களாக கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் எம்மால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தமது சீஷர்களை பார்த்து ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல நான் உங்களை அனுப்புகிறேன் என வாக்குத்தத்தமாக கூறினார். அப்படியானால் நாம் தேவனால் அனுப்பப்படுகிற ஆடுகள். உலகமோ ஓநாய்கள்.

ஆடுகளாகிய நாம் ஓநாய்களுக்குள்ளேதான் அனுப்பப்படுகிறோம். ஆடுகள் ஓநாய்களுக்குள்ளே அனுப்பப்பட்டால் என்ன நடக்கும்? சற்று கற்பனைபண்ணி பாருங்கள். ஓநாய்கள் ஆடுகளை கடித்து குதறிவிடும்.

எனவே நமக்கு உலகமாகிய ஓநாய்களால் பலவிதமான பாடுகள் உபத்திரவங்கள் உண்டு. நாம் விரும்பியோ விரும்பாமலோ அதை சந்தித்தேயாகவேண்டும். ஏனெனில் அது எமக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்.

பொதுவாக ஆடுகளை தேடித்தான் ஓநாய்கள் வரும். ஆனால் இயேசு ஓநாய்களை தேடி ஆடுகளை அனுப்புகிறார். அப்படியானால் அது பாடுகள், உபத்திரவங்கள் நிறைந்த ஓர் பணி.

*"அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்."* *2தீமோத்தேயு 3:12*

பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் இதை வலியுறுத்துகிறார். யார்? யாரெல்லாம் கர்த்தருக்கு உண்மையாய் நீதியாய், நேர்மையாய் நடக்கமனதாயிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் சோதனைகளும், பாடுகளும் உண்டு.

*"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்.*
*ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின் வைத்துப்போனார்."*

*1பேதுரு 2:21*

அப்போஸ்தலனாகிய பேதுரு பாடுபடும்படி அழைக்கப்பட்டுள்ளோம் என கூறுகிறார். ஏனெனில் கிறிஸ்து முன்வைத்துப்போன முன்மாதிரி பாடுபடுதலாகும். எனவே அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றும்படியாகவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அவர் தெரிந்துகொண்ட பாதை பாடுகள் நிறைந்த பாதை. நாமும் அப்பாதையூடாக பயணிக்கவே அழைக்கப்பட்டுள்ளோம்.

*"ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால், வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.*

*" 1பேதுரு 4:16*

கிறிஸ்துவினிமித்தம் நமக்கு ஏற்படுகிற பாடுகள் உபத்திரவங்களை நாம் சகித்துக்கொள்வதினால் தேவனை மகிமைப்படுத்துகிறோம். தேவனை மகிமைப்படுத்துவதே எமது வாழ்வின் நோக்கம். அது ஒன்று போதும் எமக்கு. வேறொன்றும் வேண்டாம் நம் வாழ்வில் கிறிஸ்துவுக்காய் பாடுபடுவதினால் தேவன் மகிமைப்படுகிறார்.

இவ்வுலகில் ஆசீர்வாதங்கள் மட்டுமல்ல, பாடுகளும் வாக்களிக்கப்பட்டுள்ளன. எனவே நாம் பாடுகள் உபத்திரவங்களின் மத்தியில் ஓடுவதற்காய் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்து பாடுகளில் வெளிப்படும் தேவமகிமைக்காய் எம்மை அர்ப்பணிப்போம்.

*சகோ.*
*ச.விக்ரம்.*

"I nullify every satanic Plan against my life by the blood of Jesus Christ".
"என் வாழ்க்கைக்கு விரோதமான சாத்தானின் திட்டங்களை இயேசுவின் இரத்தத்தின் வல்லமையால் ஒன்றுமில்லாமலாக்குகிறேன்".



"என் மீட்பர் உயிரோடிருக்கிறார்"
யோபு 20:25

# வா! வாலிபனே வா! வா!

கல்லறையில் கர்த்தர் இல்லை
கல்வாரி சிலுவையிலும் இல்லை
உன் உள்ளறையில் வாழ என்று
உன்னைத்தான் அழைக்கிறார் வா!

சிற்றின்ப சேற்றில் சிக்கி
சீரினை இழந்த வாலிபனே
நிந்தை நீங்கி நீயும் நிமிர்ந்தெழுந்திடலாம் வா!

உடலுக்கு பயிற்சியிட்டு
உண்டு உறங்கும் வாலிபனே
நித்திரைக்கு பின்வரும்
நித்தியத்தை உணராயோ?

சத்தியத்தின் நற்சான்றாக தேவ
சித்தம் செய்ய இத்தரை வந்த இயேசு
தஞ்சம் என வந்த உன்னை
நெஞ்சம் நெகிழ்ந்துருக அணைப்பார் வா!

குற்ற உணர்வுகளோ
குத்தும் நினைவுகளோ அற்று
நிம்மதியாய் வாழ்ந்திடலாம்
நித்தியத்தை அடைந்திடலாம் வா!

வஞ்சிக்கும் மாந்தர் மத்தியில் வேதத்தை
வாஞ்சிக்க உன் இருதயத்தை
சத்திய தேவன் அவர்
சத்தியத்தால் நிரப்பிடுவார் வா!



நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும்
உன் மாம்சத்திலிருந்து
தீங்கையும் நீக்கிப்போடு
இளவயதும் வாலிபமும் மாயையே!
(பிரசங்கி 11:10)

திருமதி. சாந்தி மத்தியுஸ்.

# மிரியாம்களே எழுந்திருங்கள்



பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்றைய கிறிஸ்தவ உலகம் பெண்கள் ஊழியத்தை மறுத்தும், கேள்வியும் எழுப்பிவரும் இக்காலத்தில் பெண்களின் ஊழிய மேன்மையை வேதாகம ரீதியில் எடுத்துரைப்பது முக்கியமானதாகும்.

பெண்கள் ஊழியத்தை குறித்து எழுத வேண்டும் என்ற எனது தீராத தாகம் இந்த கழுகு சஞ்சிகையின் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது

*இஸ்ரவேலின் முதலாவது ஆராதனை வழிநடத்தியவள் மிரியாம் –*
*யாத்திராகமம் 15:20-21*

செங்கடலிலே இஸ்ராயேல் ஜனங்களுக்காய் தேவன் பாதையை உண்டாக்கினார். இஸ்ராயேலர்களுக்கு அது ஜீவபாதையாகவும், எகிப்தியர்களுக்கு அது மரணபாதையாகவும் இருந்தது. எனவே செங்கடலை இரண்டாகபிளந்து தம்மை பாதுகாத்தமையும், எகிப்தியர்களை கடலில் மூழ்கடித்தமையும் இஸ்ராயேலர்களின் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவமாய் இருந்தது.

எனவே காப்பாற்றப்பட்ட இஸ்ராயேலர்கள் நன்றியுணர்வுடன் ஒரு நன்றி ஆராதனையை தேவனுக்கு ஏறெடுப்பதை யாத்திராகமம் 15ம் அதிகாரம் சித்தரிக்கின்றது.

*"ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள். சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்கு பின்னே புறப்பட்டு போனார்கள்." மிரியாம் அவர்களுக்கு பிரதிவசனமாக. கர்த்தரை பாடுங்கள். அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும் குதிரைவீரனையும் கடலிலே தள்ளினார் என்று பாடினாள்.*

*யாத்திராகமம் 15:20-21*

மிரியாம் அன்று இஸ்ராயேலர்கள் மத்தியில் தீர்க்கதரிசன ஊழியத்தையும், ஆராதனை வழிநடத்தும் ஊழியத்தையும் செய்திருக்கிறாள் என்பது வெளிப்படை.

### 1. தீர்க்கதரிசியாகிய மிரியாம் - யாத்திராகமம் 15:20

ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் ஒரு தீர்க்கதரிசி என வேதம் கூறுகின்றது. ஒரு பெண் தேவனால் அழைக்கப்பட்டு தீர்க்கதரிசன ஊழியத்தை அன்று இஸ்ரவேலர்கள் மத்தியில் செய்து வந்திருக்கிறாள். தீர்க்கதரிசன வரம் அவளுக்குள் இருந்தது.

முதல் 5 ஆகமங்களும் மோசேயால் எழுதப்பட்டது. அப்படியாயின் மாபெரும் தலைவனாகிய மோசே இப்பகுதியில் மிரியாமை தீர்க்கதரிசி என குறிப்பிடுகிறார். எனவே மிரியாம் மேசேயால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்க்கதரிசியாக இருந்திருக்கிறாள். மேசேயால் ஏற்றுக்கொள்ளப்பட்டவள் என்றால் உண்மையில் முழு இஸ்ரவேலினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவள்.

அப்படியானால் இஸ்ரவேலின் முதலாவது பெண் தீர்க்கதரிசியாக மிரியாம் இருந்திருக்கிறாள். எனவே அன்றே தேவ ஊழியத்தில் பெண்கள் முக்கிய பங்கை வகித்திருக்கிறார்கள்.

தீர்க்கதரிசி என்றால் தேவனுடைய வாயாக செயற்படுபவர்கள். அதாவது தேவனுடைய பிரதிநிதியாய் உலகில் நின்று கர்த்தரின் செய்தியை உலகிற்கு கொடுப்பவர்கள்.

மிரியாம் தேவனுடைய வாயாக செயற்பட்டாள். தேவனுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவித்தாள். தேவனுடைய வாயாக செயற்படுகிற அருமையான பாக்கியமான கனமான ஊழியத்தை மிரியாம் செய்திருக்கிறாள்.

### 2. ஆராதனை வழிநடத்திய மிரியாம் - யாத்திராகமம் 15:20-21

இஸ்ராயேலர்களின் நன்றி துதி ஆராதனையை மிரியாம் வழிநடத்தியிருக்கிறாள். அவள் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள். தம்புரு என்பது ஓர் இசைக்கருவி. அப்படியானால் தம்புரு வாசிப்பதில் மிரியாம் தேர்ச்சிபெற்றவளாக இருந்திருக்கவேண்டும். எனவே மிரியாம் ஒரு இசைக்கருவியை பயன்படுத்தக்கூடிய ஆராதனை வழிநடத்தும் தலைவி.

சகல ஸ்திரீகளும் தம்புரை எடுத்துக்கொண்டு அவள் பின்னே போனார்கள் என்பது அவளை தலைவியாக வெளிப்படுத்துகிறது. அவள் முன்னே சென்றாள். சகல ஸ்திரீகளும் அவள் பின்னே போனார்கள் என்பது அவள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தலைவி என்பதை காட்டுகிறது.

தலைவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் அவர்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்களாய் இருக்கவேண்டும். அந்த வகையில் மிரியாம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவியாய் இருந்திருக்கிறாள்.

கர்த்தரை பாடுங்கள் என கட்டளை கொடுத்து, அவளும் பாடினாள். எனவே இஸ்ரா-யேலரின் உத்தியோக பூர்வமான முதலாவது ஆராதனையை வழிநடத்தியவள் மிரியாம்.

இதை வாசித்துக்கொண்டிருக்கிற பிரியமான சகோதரியே.தாயே உன்னால் ஏன் முடியாது? உன்னால் எதுவும் முடியாது என நீ நினைத்துக்கொண்டிருக்கலாம். அந்த நினைவுக்கு இன்றிலிருந்து குட்பை சொல்லு.

கர்த்தர் உன்னை பயன்படுத்த ஆயத்தம். நீ ஆயத்தமா?

நம்மை தேவன் பயன்படுத்தமுடியாதபடி நமக்கு நாமே தான் தடையாக இருக்கிறோம். தடைகளை நீக்கி மிரியாம்களே எழுந்திருங்கள். இன்றைய திருச்சபைக்குள் இருந்து அநேக மிரியாம்கள் எழுந்திருக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். பிரியமான சகோதரியே, தாயே உன் வாழ்வை இயேசுவுக்காய் கொடு! அவர் உனக்காக மரித்தார்! நீ அவருக்காய் என்ன செய்தாய்? உன் மீட்பருக்காய் ஏதாவது செய்.

**"உன்னால் முடிந்ததை நீ செய். உன்னால் முடியாததை உன் தேவன் உன்னைக்கொண்டு செய்வார்".**

*"எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது. கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது."*
*ஏசாயா 60:1*

*சகோ.*
*ச.விக்ரம்.*

**"உன்னால் முடிந்ததை நீ செய்! உன்னால் முடியாததை உன்னைக்கொண்டு உன் தேவன் செய்வார்."**

**சகோ.ச.விக்ரம்**

# அறிந்து கொள்ளுங்கள்

*"கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்"*
*நீதிமொழிகள் 1:7*

1. மோட்டார் சைக்கிளை கண்டுபிடித்தவர்?
   ✔ ஜி.டிம்லர் (1885 - ஜேர்மனி)
2. தீப்பெட்டியை கண்டுபிடித்தவர்?
   ✔ ஜோன் வோக்கர் (1826 - பிரிட்டன்)
3. ஒலிபெருக்கியை கண்டுபிடித்தவர்?
   ✔ ஹொரஸ் சோர்ட் (1900 - பிரிட்டன்)
4. புகையிரதத்தை கண்டுபிடித்தவர்?
   ✔ ரிச்சட் ட்ரவ்திக் (1804 - பிரிட்டன்)
5. நெய்தல் இயந்திரத்தை கண்டுபிடித்தவர்?
   ✔ ஈ.கார்ட் வைட் (1785 - பிரிட்டன்)
6. சலவை இயந்திரத்தை கண்டுபிடித்தவர்?
   ✔ ஜே.எவ்.கென்ட்ரல் (1934 - அமெரிக்கா)
7. லிப்ட்டை கண்டுபிடித்தவர்?
   ✔ எலிஸ் ஜி ஓடிஸ் (1852 - அமெரிக்கா)
8. ஹெலிகொப்டரை கண்டுபிடித்தவர்?
   ✔ இட்டனி ஓம்ச்சன் (1924 - பிரான்ஸ்)
9. மின் குமிழை கண்டுபிடித்தவர்?
   ✔ தோமஸ் அல்வா எடிசன் (1879 - அமெரிக்கா)
10. கல்வனோ மீற்றரை கண்டுபிடித்தவர்?
    ✔ மாரி எம்பயர் (1834 - பிரான்ஸ்)
11. டீசல் என்ஜினை கண்டுபிடித்தவர்?
    ✔ ஹைப்பலோட் (1895 - ஜேர்மனி)
12. மூக்கு கண்ணாடியை கண்டுபிடித்தவர்?
    ✔ பெஞ்சமின் பிராங்லின் (1780 - அமெரிக்கா)
13. துவிச்சக்கரவண்டியை கண்டுபிடித்தவர்?
    ✔ கே.பீ.மெக்மிலன் (1839-40 - பிரிட்டன்)
14. வெப்பமானியை கண்டுபிடித்தவர்?
    ✔ கலிலியோ கலிலி (1593 - இத்தாலி)
15. தொலைபேசியை கண்டுபிடித்தவர்?
    ✔ அலெக்சாண்டர் கிரஹம் பெல் (1876 - அமெரிக்கா)




மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நம்மை உயர்த்துவதற்கு முன்பாக நம்முடைய சிந்தனையை உயர்த்தவேண்டும். நமது சிந்தனைகளையும் பழக்கங்களையும் அடக்கியாள நாம் கற்றுக்கொண்டால் தேவனாகிய ஒரே கடவுளின் மனித சிருஸ்டிப்பின் நோக்கத்தையும் அறிந்தவர்களாக செயற்பட முடியும்.

"இளம்வாலிபர்களாகியநீயும்நானுமேமனிதஇனத்தின்புதுயுகத்தைதோற்றுவிக்கும் வித்தாக மாற்றம் பெறவேண்டியவர்கள்.

நமது சிந்தனைக்கான ஆரோக்கியத்தின் அழியாத நியமம் நமக்குள்தான் இருக்கிறது. நாம் சர்வரோக நிவாரணத்தை நமது சிந்தனை செயற்பாட்டின் மூலம் உற்பத்தியாக்கி மனித மனங்களின் புண்கள், வடுக்கள், காயங்கள் என்பவற்றை குணப்படுத்துவதற்கு அதனை பயன்படுத்தமுடியும்.

**"தேவன் நம்மை படைத்த அதே நியமந்தான் நம்மை பழுது பார்த்து, புதுப்பித்து, குணமாக்கி பராமரிக்கின்றது".**

மனிதனின் வெளித்தோற்றமே நமது உடல்.

வழக்கமான நமது சிந்தனைகளின் சித்திரமே நமது சரீரத்தில் பிரதிபலிக்கின்றது என்று கூறினால் மிகையாகாது. நமது சிந்தனையை புதுப்பித்து அதற்கூடாக நமக்குரிய பண்புகளை புதுப்பித்தால் மாத்திரமே நமது சரீர அமைப்பை புதுப்பொலிவுடன் மிளிரச்செய்ய முடியும். இதனூடாக மனிதர்கள் நடுவே இளம் வாலிபர்களாகிய நாம் நமது சொந்த சூழ்நிலையை வடிவமைக்க முடியும்.

நமக்கும் நமது சிந்தனைக்கும் நடுவே இசைவும், நேர்கோட்டிலான தொடர்பும் எப்பொழுதும் காணப்படும் என்பது சாத்தியமானதொன்றல்ல. நமது சிந்தனையின்

மையத்தளமானது "ஒற்றுமையின் வாழ்வு, ஆரோக்கியத்தின் வாழ்வு, ஐசுவரியத்தின் வாழ்வு, வெற்றியின் வாழ்வு என்பவற்றை தூண்களாக கொண்டு "விசுவாசம்" என்ற அஸ்திபாரத்தில் வடிவமைக்கப்படல் வேண்டும். மனித அறிவி யலை கடந்த இந்த விசுவாசம் நம்மை சிருஸ்டித்த தேவனுடன் நம்மை ஒன்றிணைக்கிறது.

**"நமது முடிவை வடிவமைக்கும் தெய்வீகம் நமக்குள்தான் இருக்கின்றது".**

## சிந்தனையின் செல்வாக்கு (மனிதனின் சக்தி)

நம்முடைய வழக்கமான சிந்தனை நமது நம்பிக்கையுடன் தொடர்புபடும்போது நாம் என்னவாக மாற விரும்புகின்றோமோ அப்படியே மாற முடியும். எதைச்செய்யவி ரும்புகின்றோமோ அதையே செய்ய முடியும். நமது சிந்தனையை பொறுத்தே எமது முடிவு மாற்றம் பெறுகிறது.

தாழ்வுமனப்பாண்மை, பொறுமையின்மை, மன்னிக்கமுடியாத கசப்பு போன்ற உளச்சிக்கல்களுக்கான ஒரேமாற்று நிவாரணி - ஆரோக்கிய சிந்தனையின் தணிக்கமுடியாத உயிரோட்டமுள்ள ஒரு விசை அல்லது சக்தியே ஆகும். இத்தகைய ஆரோக்கியத்துக்கான மனதின் சக்தியை தட்டியெழுப்பினால் நமது எல்லா காயங்களும் வடுக்களும் குணமாகும்.

சிந்தனைக்குறைபாடு (மனக்குறைவு)

## நம்மை சிருஸ்டித்த தேவனின் கட்டளை என்ன?

மனிதர்களாகிய நாம் மேல்நோக்கிப் பார்க்கவேண்டும். கீழ்நோக்கி அல்ல. தேவன் நமக்கு செயலாற்றலை தந்தது பாய்ந்து ஏறுவதற்கு மாத்திரமே. ஊர்ந்து செல்வதற்கு அல்ல. நமது சிந்தனையின் ஏழ்மை நம்மை ஊனமுற்றவர்களாக முடக்கிவிடுகின்றது.

**"தேவன் தம்முடைய சிருஸ்டிப்பின் மகுடமான நம்மை எவ்விதமான வாய்ப்பின் கை-யிலும், விதி யின் கையிலும் விட்டுவிடவில்லை".**

நமது சிந்தனை விசையை பற்றுதி எனும் விசுவாசத்துடன் இணைத்து சிந்தனை செழிப்பு எனும் பாதையில் தொடர்ச்சியாக பயணித்து வெற்றிக்கோட்டை அடையவேண்டும்.

வெளிப்புறமான ஏழ்மையைவிட உள்ளார்ந்த ஏழ்மை நிலையிலான சிந்தை மிகவும் அபாய-கரமானதும், அவலமானதுமாகும்.

"நாம் ஏழைகள்... ஏழைகளாகவே இருப்போம்".

"நாம் பேதமை நிறைந்தவர்கள்.பேதைகளாகவே இருப்போம்".

இத்தகைய ஒரு மன உந்துதலின் உணர்வோடு நாம் இருப்போமெனில், மீளவே முடியாத வறுமையின் முற்புதருக்குள் சிக்கிவிடுகிறோம். செழிப்பு எனும் அபரிமிதத்தின் ஓரத்தைகூட தொடமுடியாதவர்களாக காணப்படுவோம்.

வெற்றியை உங்களுக்கு முன்பாக ஓடவிடுங்கள். ஏழ்மையையும், தோல்விகளையும், ஏமாற்றங்களையும் உங்களுக்கு பின்புறமாக துரத்திவிடுங்கள். அதையிரியம், பயம், இயலாமை, நம்பிக்கையின்மை, சோர்வு, விரக்தி, பொறாமை, வெறுப்பு ஆகிய தோல்விக்குரிய முகவர்களிடமிருந்து உங்களை விடுவியுங்கள்.

**"சாத்தியமான தோல்வியை அல்ல. அசாத்தியமான வெற்றியை குறித்து சிந்திப்பதற்கு உங்களை அனுமதியுங்கள்".**

இறுதியாக...

நமது சிந்தனைக்கதவின் முன்பாக நாமே காவலனாக நின்று நமக்கு மகிழ்ச்சியையும், சுபீட்சத்தையும் பரிசளிக்கும் "இணக்கமான சிந்தனையையும் பிரேரணைகளையும் மாத்திரமே மனதில் நுழைய விடுவோம். முரண்பாட்டையும், தோல்விகளையும் தோற்றுவிக்கும் எதிரியான சிந்தனைகளையும் தடுத்து வெளியேற்றுவோம்.

சிருஸ்டிப்பின் தேவனுடனான ஒருமித்த உறவு மூலம் நமது யௌவன வாழ்விற்கான அமைதி, ஆற்றல், அபரிமிதம் எனும் மூவகை வெற்றியின் இரகசியங்களை அறிந்துகொள்ளமுடியும். இவை மூன்றுமே தேவனின் முடிவில்லா வாழ்விற்குள் நம்மை அழைத்துச்செல்கின்றன.

*"உங்களது எல்லா சூழ்நிலையிலும் உங்களது வெற்றியை உறுதிப்படுத்துங்கள். பிரகடனப்படுத்துங்கள். நீங்கள் சூழ்நிலைக்கு அடிமைகள் அல்ல. "யாரையும் புண்படுத்தாமல், யாரையும் பின்னடையச்செய்யாமல் எனது வெற்றியை நான் பெறுவேன்"என்ற தீர்மானத்தை அறிக்கையிடுங்கள்."*

**அமைதி,ஆற்றல், அபரிமிதம்இவை**

**உங்களுக்கு.... உங்களுக்கு மாத்திரமே திட்டமிடப்பட்டது.**

**இவை உங்களது பிறப்புரிமை!**

*சகோ.*
*சாந்தி டெபோராள்*




தாவீது ராஜாவை வேதாகமத்தில் தெரியாதவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். இஸ்ரவேலின் ராஜாக்களிலேயே மிகவும் பிரசித்தமானவர். ஆண்டவராகிய இயேசு கூட தாவீதின் குமாரன் என்று அழைக்கப்பட்டதோடு, தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்றும் புகழப்பட்டார்.

இதை விட வேதாகமத்திலேயே ஆண்டவரே தாவீதை தன்னுடைய இருதயத்திற்கு ஏற்றவன் கூறியுள்ளார். இதனால் தான் தாவீதின் வம்சத்தில் இயேசுவை அனுப்பி அவனைக் கனம் பண்ணினார். தாவீது கடவுளிடம் மிகவும் அன்பாக இருந்தார். அநேக சங்கீதங்களையும் நமக்கு தந்திருககின்றார்.

ஒரு முறை தாவீது ராஜா பத்சேபாள் என்னும் உரியாவின் மனைவியின் மேல் ஆசை கொண்டவனாய் அவளை அடைந்து கொள்வதற்காக உரியாவை அம்மோன் புத்திரரின் கையினாலே கொல்லப் பண்ணினான். அதன் பின்னர் அவன் பத்சேபாளை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான்.

அவன் கர்ப்பவதியாக இருந்தாள். இந்தக் காரியம் ஆண்டவரின் பார்வைக்கு பொல்லாததாக இருந்தது. 'தாவீது செய்த இந்தக் காரியம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது. (2 சாமு 11:27)

இதன் பின்னர் கடவுள் தாவீதின் இந்தப் பாவத்தைக் குறித்து தேவனுடைய ஊழியக்காரனாகிய நாத்தான் மூலமாக தாவீதோடு பேசி அவனை எச்சரித்ததோடு, அவனுக்கும் பத்சேபாளுக்கும் பிறந்த முதல் குழந்தையின் உயிரிரையும் பறித்துக் கொண்டார்.



**இதன் போது தாவீது அந்தப் பிள்ளையைக் கொல்ல வேண்டாம் என்று தேவ-னி டம் அழுது புலம்பினான். ஆனால் தேவனுடைய மனுஷன் கூறியதைப் போல அந்தக் குழந்தை செத்தது. ஆண்டவர் தண்டனையை வழங்கினார்.**

**அத்தோடு தாவீதின் இந்த பாவத்திற்காக அவனுடைய பெண்களை (மனைவியரை) சூரிய வெளிச்சத்திலே அவன் மகனாகிய அப்சலோம் தனக்கு மனைவியாக்கினான். இதனையும் ஆண்டவர் தாவீதிற்கு தண்டனையாகக்** கொடுத்தார்.

உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன் அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான் (2 சாமு 12:11)



இவ்வாறு கடவுள் தன்னுடைய இருதயத்திற்கு ஏற்றவன் என்று தாவீது பாவம் செய்து தேவனுடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்த போது அவர் அவனைத் தண்டிக்காமல் அவன் என்னுடையவன் என்று விடவில்லை. அவர் நியாதிபதி

சில நேரங்களில் நாம் நினைக்கின்றோம். ஆண்டவர் எனக்கு நியாயம் செய்யவில்லை. ஆண்டவர் என்னைக் கைவிட்டு விட்டார் என்று அழுது புலம்புகின்றோம். சிலர்



ஆண்டவர்என்னிடம் அதிக அன்பாக இருக்கின்றார் என்று சொல்லி தாவீதைப் போல ஆண்டவரின் பார்வைக்கு பாவ-மானகாரியங்களைச் செய்கின்றோம்.

பிரியமானவர்களே நம்முடைய ஆண்டவர் சர்வ லோக நியாயாதிபதி அவர் ஒரு நாளும் ஓரவஞ்சனை செய்கிற தேவன் அல்ல. அவர் சர்வலோக நீதிபதி தன்னுடைய பிள்ளைகளாக இருந்தாலும்நீதியை செய்து முடிக்கின்றவர். ஆண்டவர் தாவீதைக் தண்டித்தாலும் அவனுக்கு இரங் கி-னார். இன்று உங்களில் பலர் நான் ஆண்டவரின் பிள்ளை நான் இதைச் செய்தால் ஆண்டவர் மன்னிப்பார் என்று நினைத்து சில பாவங்களைச் செய்கின்றோம். கடவுள் மிகவும் கிருபை நிறைந்தவர்...

ஐயோ! அப்படியானால் என்னுடைய பாவங்களுக்கு தண்டனை தானா? தீர்ப்பு இல்லை.. ஒருபோதும் இல்லை... நம்முடைய ஆண்டவர் கல்வாரி சிலுவையிலே-யே உனக்காகவும் எனக்காகவும் நீயும் நானும் பெறவேண்டிய தண்டனைகளை தான் அனுபவித்து என்னையும் உன்னையும் விடுதலையாக்கினார். அவர் பாடு அனுபவித்து மரித்து உயிர்தெழுந்து இன்று ஜீவிக்கிறார்.

தாவீது மனந்திரும்பிய போது அவன் மீது கடவுள் கிருபையாக இருந்து அவனை மன்னித்ததோடு அவனுக்காக இரக்கினார். இன்று நம்மில் பலர் இவ்வாறான நிலைமைகளில் இருந்து அழுது புலம்பிக்கொண்டிருக்கலாம்! என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இருக்கலாம்.

இப்போது நீங்கள் கடவுளிடம் உங்கள் பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்புங்கள் அவர் உங்களுக்கு உதவி செய்வார்.

ஆண்டவர் உங்களுக்கான நியாயங்களை ஒருபோதும் மறந்து விடவில்லை. என் ஆண்டவர் சொன்னால் சொன்னது தான் அவர் மாற மாட்டார்.

கிருபையின் தெய்வமே தாவீதைப் போன்று நான் செய்த என்னுடைய பாவங்களை அறிக்கை செய்கின்றேன். என்னை மன்னியுங்கள். எனக்கு உதவி செய்யுங்கள். ஆண்டவரே எனக்கு நியாயம் செய்யுங்கள். என் மேல் பிசாசு குற்றஞ்சாட்டாதபடி நீர் எனக்காக கல்வாரி சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் என்னை கழுவி என் தண்டனைகளை என்னிடமிருந்து எடுத்து என்னை உம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும். ஆமேன்...

*சகோ.*
*ஜோன் வின்ஸ்லோ.*

**உயிர்த்தெழுந்த இயேசு உங்கள் உள்ளத்தில் இருந்தால். உங்களுக்கும் உயிர்த்தெழுதல் நிச்சயமே!**

போதகர்.
L.J.மத்தியுஸ்.

# நீ ஏன்?



மனிதா இந்த நிரந்தரமில்லாத உலகில்
நீ ஏன்?
பணத்தையும் பொருளையும்
ஓடி ஓடி தேடுகிறாய்!

அவற்றைக்கொண்டு
உன்னைப்படைத்த
கிறிஸ்து இயேசுவிடம்
செல்வாயா?
இல்லை அவைதான் உனக்கு
நித்திய ஜீவனை கொடுத்திடுமா?

அவற்றை தேடுவதைவிட்டு நீ
கிறிஸ்து இயேசுவைத் தேடு!
கொடுப்பார் உனக்கு நித்திய ஜீவன்
பெறுவாய் நீயும் நித்திய வாழ்வு!

சகோ.
யோ.விமல்ராஜ்.

"Fight by Fire , Fight by Force , Fight by Battle for Me"

"அக்கினியால் யுத்தம் செய்யும் சக்தியினால் தள்ளுகிறோம்.
என் யுத்தத்தை நீரே செய்யும்".

# விண்பனி
## இறுவட்டு வெளியானது




கல்வாரிக் கழுகுகளின்
விண்பனி நத்தார் சிறப்பு
நிகழ்ச்சி இறுவட்டி வெளியிட்டு
வைக்கப்பட்டுள்ளது.

**இறுவட்டினைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றவர்கள். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

**தொடர்புகளுக்கு :**
**எஸ்.கஜேந்திரன் 0779907129**
**ஜோன் வின்ஸ்லோ 0778448001**

# வாழ்த்துகிறோம்

16-03-2013 அன்று திருமண வாழ்வில் இணைந்த

## பிரதாபன், அனிதா (கனடா)

தம்பதியினராகிய எமது பங்காளர்களை
கல்வாரி கழுகுகளாகிய நாம் ஆண்டவர் இயேசுவின்
நாமத்தில் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.

"உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும்
திராட்சைக்கொடியைப்போல் இருப்பாள். உன் பிள்ளைகள்
உன் பந்தியை சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல்
இருப்பார்கள்."

சங்கீதம் 128:3

**கல்வாரி கழுகுகள்**

# வாலிபர் பாசறை



## எதிர்வரும்
## ஓகஸ்ட் மாதம்
## 19ம் திகதியிலிருந்து
## 23ம் திகதிவரை
## (5 நாட்கள்)



**கல்வாரி கழுகுகளின்**

**வருடார்ந்த வாலிபர்பாசறை இடம்பெறவுள்ளது.**

இதற்காக ஜெபியுங்கள்.

கல்வாரி கழுகுகளாகிய நாம் உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

மேலதிக விபரங்களை பின்னர் அறியத்தருவோம்.

ஆயத்தப்படுங்கள்...

# இறுவட்டு வெளியீடு













கல்வாரி கழுகுகளினால் "விணபனி" எனும் சிறப்பு நிகழ்வின் இறுவட்டு கடந்த 17-03-2013 அன்று போதகர்.றொபேட் றோய் (இந்தியா) போதகர்.லெஸ்லி மத்தியுஸ் ஆகியோரின் ஆசீர்வாத ஜெபத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்த





## வாழ்த்துகிறோம்

31-01-2013 அன்று திருமணவாழ்வில் 37 ஆண்டுகளை நிறைவு செய்த கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தின் தலைமைப்போதகர்.லெஸ்லி மத்தியுஸ் அவர் தம் பாரியார்.சாந்தி மத்தியுஸ் ஆகியோரை நினைவுப்பரிசில் வழங்கி கல்வாரி கழுகுகள் கௌரவித்தனர்.

இக் "கழுகு" சஞ்சிகையானது தொடர்ந்தும்
வெளியிடுவதற்கு உதவியாக உங்கள் ஜெபத்தினாலும்
பண உதவியாலும் தாங்குங்கள்

# உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.


எங்கள் முகவரி :
"கல்வாரி கழுகுகள்"
89,பிறவுண் வீதி, த.பெ.இல-02
கொக்குவில், யாழ்ப்பாணம், இலங்கை

Our Address
"Calvary Eagles"
89, Brown Road, Po.Box.No-02
Kokuvil, Jaffna, Srilanka.

தொடர்புகளுக்கு:
T.P : 0779907129, svikram4230@yahoo.com